**மீரிகம பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 22 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 பெப்ரவரி 26 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீரிகம பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மீரிகம விளையாட்டு மைதானத்தின் பக்கச் சுவரின் நிர்மாணிப்பு, காணி கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிராமையால் காணி கட்டிடக் கணக்கு மீதி ரூபா 2,928,422 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன மானியம் கணக்கு வைத்தலின் போது மீளாய்வாண்டில் காசாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,669,379 தொகை மாத்திரம் கணக்குகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2012 அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டின் போது

பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 20,636,057 தொகை கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி மூலதன மானியம் மற்றும் மூலதன மானியக் கடன்பட்டோர் மீதி அதே தொகையால் குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,633,262 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,041,987 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,236,516 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வீதவரி

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி மீதி ரூபா 7,170,587 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,000 இற்கு மேற்பட்ட நிலுவையான வீதவரி மீதி ரூபா 1,256,649 காணப்பட்டது. தனியார் நிறுவகம் ஒன்றிடமிருந்து ரூபா 705,862 தொகையான நிலுவையான வீதவரி மீதி

காணப்பட்டதுடன் இது 10 ஆண்டு காலம் பழைமை வாய்ந்ததாகக் காணப்பட்டது.

(ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் படி 7 கிராம சேவகர் பிரிவுகள் அபிவிருத்தி பிரதேசமாகப் பெயரிடப்பட்டிருந்த போதிலும் 2013 நவம்பர் 17 ஆம் திகதி வரையிலும் வீதவரி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 80/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கடை வாடகை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏனைய வருமானம்**

2006 முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது கிடைக்கப்பெற்ற நானாவித வருமானத் தொகையான ரூபா 89,610 வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம்**

2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 2,562,914 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**தற்காலிக வாராந்த சந்தை நிர்மாணிப்பு**

04 மாதங்கள் அளவிலான காலப்பகுதியின் போது பயன்படுத்தப்படுவதற்காக தற்காலிகமான வாராந்த சந்தை ஒன்றை நிர்மாணிப்பதற்காக பின்வரும்

மதிப்பீடுகள் இரண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீடுகள் 2012 யூலை 24 ஆம் திகதி பொதுக் கூட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

| | **ரூபா** |
|---|---|
| 12 கூடங்களைக் கொண்ட 14 அலகுகளுக்கானவை | 973,000 |
| 12 கூடங்களைக் கொண்ட 11 அலகுகளுக்கானவை | 764,500 |
| | -------------- |
| | 1,737,500 |
| | ======== |

இதன் படி 2012 திசெம்பர் 12 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றினால் ஜீ.ஐ குழாய்களும் கல்வனைஸ் தகடுகளும் பெறப்பட்டிருந்த போதிலும் இதற்காக ரூபா 1,737,500 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஒரே நிர்மாணிப்பிற்காக இவ்வாறு இரு மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் தேவைப்பாடு கணக்காய்விற்குத் தெளிவற்றதாகக் காணப்பட்டது.

(ஆ) மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,737,500 தொகையான இச் செலவினம் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) இந் நிர்மாணிப்பு தொடர்பாக வேலை முடிவுறுத்தல் அறிக்கை அல்லது அளவீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சில மாதங்களான குறுகிய காலத்திற்காக இத்தகைய பாரிய தொகையைச் செலவிட்டிருந்ததுடன் இதற்கு மேலாக வாராந்த சந்தையின் மின்சாரச் செலவினமாக 6 மாதங்களுக்காக ரூபா 45,918 தொகை சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) நடாத்தப்பட்டு வரும் வாராந்த சந்தை இவ்விடத்திற்குக் கொண்டுவரப்படுவதற்காக இவ் வாராந்த சந்தை நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2013 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் சந்தை

இவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் வியாபாரிகள் பலர் அங்கு வியாபாரத்தில் ஈடுபடாமையும் வாராந்த சந்தை பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது. இதன் படி வாராந்த சந்தை நிர்மாணிப்பின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2.4 காணி உப கூறாக்கப்படல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 நவம்பர் 13 ஆம் திகதிய 1053/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் காணிகளின் உபகூறாக்கப்பட்டு விற்பனை செய்வது தொடர்பான துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்ததுடன் சபையால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) வர்த்தமானி அறிவித்தலில் 5(4) மற்றும் 5(5) ஆம் பந்தியின் படி, முறையாகக் கூறாக்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் ஹெக்டேயர் 0.5 இற்கும் 1 இற்கும் குறைவெனில் 5 சதவீதமும், ஹெக்டேயர் 1 இற்கு மேற்பட்ட 4 இற்கும் குறைவெனில் 8 சதவீதமுமான அளவு (வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணி தவிர்ந்த) மக்கள் சேவை மற்றும் வினோத விளையாட்டு நடவடிக்கைகளுக்காக உரிய துணைக்கூறாக்கல் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் பின்வரும் காணிகளின் உப கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் பொது வசதிகளுக்காக ஒதுக்கபட்டிருக்கவில்லை.

(அ) திட்ட இல. 1808 ஹெடிதெனிகந்த கிராமத்தில் உள்ள கந்தன்கலேவத்த காணி
(ஆ) திட்ட இல. 4403 வல்போத்தலே உணுமுவாகலே எனும் பெயருடைய காணி
(இ) திட்ட இல. 2759 கல்எலிய கிராமத்தில் உள்ள வெல்லவில பொடவத்த

(ii) வர்த்தமானி அறிவித்தலில் 5(4), 5(5) மற்றும் 5(6) ஆம் பந்தியின் படி, விடுதி வசதிகளுக்காக உப கூறாக்கப்படுகையில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையிலும் பார்க்க குறைவான அளவு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் எவ்வித காணி அளவும் பெற்றுக்கொள்ளப்பட்டிராத 7 சந்தர்ப்பங்களால் சபைக்குக் கிடைக்கப்பெறாதிருந்த அளவு 464.75 பேர்ச்களாகக் காணப்பட்டன.

(iii) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 6(ஓ) பந்தியின் படி, விடுதி வசதிகளுக்காக உப கூறாக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியிக்கு குழாய் நீர் வசதிகள் இல்லாதிருப்பின் குடிநீர் பெற்றுக்கொள்ளப்பட முடியும் என தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் எழுத்துமூலப் பரிந்துரையும் 6(ஓ) பந்தியின் படி விடுதி வசதி நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரியின் எழுத்து மூல பரிந்துரையும் 6(ஔ) பந்தியின் படி காணிக்கு மின்சாரத்தை வழங்குவதாக இலங்கை மின்சார சபையின் உறுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத்தகைய உறுதிப்படுத்தலின்றி காணிகளின் உபகூறாக்கல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(iv) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 11(இ) பந்தியின் படி, உப கூறாக்கப்பட்ட காணியினுள் ஒதுக்கப்பட்ட சகல வீதிக் காணிக் கூறுகளும் 20 இற்கு மேலான தொகையைக் கொண்டிருப்பின் வீதியின் அகலம் 9 மீற்றர்கள் (ஏறத்தாழ 30 அடி) ஆக வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திட்ட இல. 1401 லோலுவாகொட கெமிலஸ்வத்த 43 ஏக்கர் 1 ரூட் தேங்காய் காணி ஏலவிற்பனைத் திட்டம் 2005 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டதுடன் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) மேற்குறித்த முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் 6(இ) பந்தியின் படி, உப கூறாக்கப்படுவதற்கு

உத்தேசிக்கப்பட்ட காணி 0.4 ஹெக்டேயருக்கு கூடுதலான தேங்காய் காணியெனில் இதற்காக தெங்குப் பயிரீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2004 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய சீஓஎஸ்/கட்டி/2004 ஆம் இலக்க தெங்குப் பயிரீட்டுச் சபையின் தலைவரது கடிதத்தின் படி இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காணி உபகூறாக்கலினால் சுற்றாடலுக்கு பாதிப்பு இல்லை என மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து ஓர் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2004 ஒக்டோபர் 04 ஆம் திகதிய 08/என்ஆர்எம்/எல்ஏஎன்டீ/117/2004 ஆம் இலக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 5(7) ஆம் பந்தியின் படி, பிரதேசத்தின் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறும் பகுதி மயானத்திற்கான காணியாக ஒதுக்கப்பட வேண்டியதுடன் அப் பகுதி 10 ஹெக்டேயருக்கு மேற்படின் மயானத்திற்கான காணியின் அளவை வர்த்தமானி அறிவித்தலின் 5(7) (ஆ) விதந்துரைகளுக்கேற்ற வகையில் சபையால் தீர்மானிக்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலின் 5(8) ஆம் பந்தியின் படி, குப்பை கூளங்களுக்காக போதிய காணி சபையின் இணக்கப்பாட்டுடன் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) சமூக மற்றும் விநோத நடவடிக்கைகளுக்காக பாதைகள் ஒதுக்கப்பட்டதை அடுத்து 10% ஆன அளவு அதாவது 586.07 பேர்ச் சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் உரிய உறுதியின் படி 358.5 பேர்ச் அளவு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 343.5 பேர்ச் அளவானவை பொது வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு ஏற்ற பகுதிகளாக இருக்கவில்லை.

## 2.5 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் நிலுவையான மற்றும் கேள்வித் தொகைக் கூட்டுத்தொகையான ரூபா 797,358 அறவிடப்படுவது தொடர்பாக இரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக 5 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவ் வழக்குகளில் 4 உரிய தரப்பினருக்கு நேர்ந்துள்ள அநியாயங்கள் தொடர்பானதுடன் ஒரு வழக்கு சுற்றாடலுக்கு தாக்கமிளைக்கக் கூடிய வகையில் வணிக வியாபார நடவடிக்கைகளை நடாத்தும் வகையில் அனுமதி வழங்கப்படுவது தொடர்பாக ரூபா 10 இலட்சம் நட்டஈடு கோரி தொடரப்பட்ட வழக்காகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சபையால் மேற்குறித்த வழக்குத் தொடர்பாக ரூபா 76,000 தொகை சட்டத்தரணிகளின் கட்டணமாகச் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் போது பனாவல வீதி அகலப்படுத்துவதற்காக காணிகள் கையேற்கப்படுகையில், காணிகள் கையேற்கப்படும் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு செயற்படுத்தப்பட்டிராமையால் பாதிக்கப்பட்ட நபரால் ரூபா 35,000 தொகையான நட்டம் கோரப்பட்டு 2003 ஆம் ஆண்டின் போது சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டின் போது நட்டம் சபை நிதியத்திலிருந்து செலுத்த நேர்ந்தது. எனினும், அப் பணம் குறித்த தரப்பினருக்கு சபையால் செலுத்தப்பட்டிராமையால் 2012 திசெம்பர் 18 ஆம் திகதி சபைக்கு உரித்தான ஓர் முச்சக்கர வண்டி நீதிமன்றத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் 2013 சனவரி 04 ஆம் திகதி அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்திற்கு ரூபா 94,918 தொகை செலுத்தப்பட்டு முச்சக்கர வண்டி விடுவிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றக் கட்டளையின் படி குறித்த தினத்தில் உரிய கொடுப்பனவை மேற்கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் செயற்பட்டிராமையால் மேலதிகமான

பணத்தைச் செலுத்த நேர்ந்துள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.6 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மூலதன மானியக் கடன்பட்டோர் (2.81) கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 1,979,294 தொகை ஆண்டு முழுவதும் மாற்றமின்றிக் காணப்பட்டதுடன் அத் தொகை உரிய தரப்பினரால் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், (3-81) மூலதன மானியக் கடன்பட்டோர் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 5,233,330 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,754,525 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய மீதியான ரூபா 2,478,805 தொகை மீளளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி 20 விடயங்கள் தொடர்பாக 93 பொருட்களின் பற்றாக்குறை நிலவியதுடன் இப் பற்றாக்குறை தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு உரித்தான 32 கடைகளுக்கு உடன்படிக்கைகள் 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளின் போது முடிவுற்றிருந்த போதிலும் அக் கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்படவோ, மீளக் கேள்வி கோரப்படவோ இல்லை.

**2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

சபைக்கு 4 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக, 2012 வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 1,600,000 தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதன் படி 2012 மே 18 ஆம் திகதி தனியார் நிறுவகம் ஒன்றிடமிருந்து ரூபா 525,000 படியான விலையில் 04 முச்சக்கர

வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) விலை மனுக்கோரலில் தேவையான மாதிரி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின் படி ஆகக் குறைந்த விலை ரூபா 510,020 தொகையானதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட விலை ரூபா 525,000 ஆகக் காணப்பட்டது. இதற்காக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அல்லது நிதிக் குழுவின் பரிந்துரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்குறித்த கொள்வனவு தொடர்பாக தேசிய பாதீட்டுப் பணிப்பாளரினதும் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு

(உ) காணி உப கூறாக்கல்